1. What is the share of central Government in Pradhan Mantri Awaas Yojana (Gramin) during the year 2016-17 in Tamilnadu?

(A) Rs. 72,000 (B) Rs. 60,000
(C) Rs. 35,000 (D) Rs. 25,000

தமிழ்நாட்டில் 2016-17ம் ஆண்டில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் (ஊரகம்) மத்திய அரசின் பங்குத் தொகை எவ்வளவு?

(A) ரூ. 72,000 (B) ரூ. 60,000
(C) ரூ. 35,000 (D) ரூ. 25,000

2. How much RCC Roofing cost is provided by Government of Tamilnadu under Pradhan Mantri Awaas Yojana (Gramin) during the year 2016-17?

(A) Rs. 2,00,000 (B) Rs. 1,50,000
(C) Rs. 1,00,000 (D) Rs. 50,000

2016-17ம் ஆண்டில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் (ஊரகம்) கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக தமிழக அரசு வழங்கும் தொகை எவ்வளவு?

(A) ரூ. 2,00,000 (B) ரூ. 1,50,000
(C) ரூ. 1,00,000 (D) ரூ. 50,000

3. Under Pradhan Mantri Awaas Yojana (Gramin) for construction of a house how many unskilled person days are providing under MGNREGS?

(A) 90 days (B) 100 days
(C) 150 days (D) 200 days

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் (ஊரகம்) வீடு கட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், அனுமதிக்கப்படும் திறன்சாரா மனித சக்தி நாட்கள் எத்தனை?

(A) 90 நாட்கள் (B) 100 நாட்கள்
(C) 150 நாட்கள் (D) 200 நாட்கள்

4. How many bags of cement are being issued to a beneficiary through department Under Pradhan Mantri Awaas Yojana (Gramin)?

(A) 104 bags (B) 120 bags
(C) 150 bags (D) 160 bags

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் (ஊரகம்) பயனாளிக்கு துறை மூலம் எத்தனை மூட்டைகள் சிமெண்ட் வழங்கப்படுகிறது?

(A) 104 மூட்டைகள் (B) 120 மூட்டைகள்
(C) 150 மூட்டைகள் (D) 160 மூட்டைகள்

5. How many Kilograms of steel is being issued to a beneficiary through department under Pradhan Mantri Awaas Yojana (Gramin)?

(A) 300 kg (B) 320 kg
(C) 350 kg (D) 400 kg

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் (ஊரகம்) பயனாளிக்கு துறை மூலம் எவ்வளவு கிலோ கிராம் இரும்பு கம்பி வழங்கப்படுகிறது?

(A) 300 கிகி (B) 320 கிகி
(C) 350 கிகி (D) 400 கிகி

6. Under Pradhan Mantri Awaas Yojana (Gramin) the construction of house should be completed within ———— from the date of sanction.

(A) 12 months (B) 9 months

(C) 7 months (D) 6 months

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் (ஊரகம்) அனுமதியளிக்கப்பட்ட வீடுகள் ————க்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும்.

(A) 12 மாதங்கள் (B) 9 மாதங்கள்

(C) 7 மாதங்கள் (D) 6 மாதங்கள்

7. Tamil Nadu Village Habitation Improvement Scheme was extended during ———— as THAI II.

(A) 2011-12 (B) 2012-13

(C) 2013-14 (D) 2016-17

தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம் ————ம் ஆண்டில் தாய் II திட்டமாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

(A) 2011-12 (B) 2012-13

(C) 2013-14 (D) 2016-17

8. Under THAI II Scheme the total cost of rehabilitation of MI Tanks shall not exceed

(A) Rs. 50 Lakhs (B) Rs. 25 Lakhs

(C) Rs. 30 Lakhs (D) Rs. 40 Lakhs

தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம் (THAI-II)ன் கீழ் சிறுபாசன ஏரிகள் புனரமைத்தல் பணி ————க்கு மிகாமல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(A) ரூ. 50 இலட்சம் (B) ரூ. 25 இலட்சம்

(C) ரூ. 30 இலட்சம் (D) ரூ. 40 இலட்சம்

9. The Total Area of the Amma Gym will be ———— Sq.ft.

(A) 1161 (B) 1181

(C) 1191 (D) 1200

அம்மா உடற்பயிற்சிக் கூடம் ———— சதுர அடி பரப்பளவில் அமைக்கப்படும்.

(A) 1161 (B) 1181

(C) 1191 (D) 1200

10. ———— will be the tender accepting authority of GYM equipments to be procured in the Amma Park.

(A) District Collector

(B) Project Director, DRDA

(C) Block Development Officer (Village Panchayat)

(D) Block Development Officer (Block Panchayat)

அம்மா உடற்பயிற்சி கூடத்திற்கான உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தபுள்ளி ஏற்கும் அதிகாரி ———— ஆவார்.

(A) மாவட்ட ஆட்சித் தலைவர்

(B) திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

(C) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)

(D) வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)

11. Amma Gym will be established in the

(A) Amma Park
(B) Block Development Office
(C) District Collector Office
(D) Village Panchayat Service Centre

அம்மா உடற்பயிற்சிக் கூடம் —————— ல் அமைக்கப்படும்.

(A) அம்மா பூங்கா
(B) வட்டார வளர்ச்சி அலுவலகம்
(C) மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
(D) கிராம ஊராட்சி சேவை மையம்

12. Which one of the following officer, is not a member in District level Committee constituted for procurement of equipments for Amma Gym?

(A) Executive Engineer (Rural Development)
(B) District Sports Officer
(C) Assistant Director (Panchayats)
(D) District Revenue Officer

அம்மா உடற்பயிற்சி கூடத்திற்கான உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கான மாவட்ட அளவிலான குழுவில் கீழ்க்கண்ட அலுவலர்களில் இடம் பெறாதவர் யார்?

(A) செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி)
(B) மாவட்ட விளையாட்டு அலுவலர்
(C) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
(D) மாவட்ட வருவாய் அலுவலர்

13. —————— will be the tender inviting authority of the establishment of Amma Park.

(A) Assistant Director (Panchayats)
(B) Executive Engineer (Rural Development)
(C) Block Development Officer (Block Panchayat)
(D) Project Director, DRDA

அம்மா பூங்கா நிறுவுவதற்கு ஒப்பந்தபுள்ளி வரவேற்கும் அதிகாரி —————— ஆவார்.

(A) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
(B) செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி)
(C) வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)
(D) திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

14. The work order will be issued by the —————— for execution and creation of Amma Park.

(A) Project Director, DRDA
(B) Executive Engineer (Rural Development)
(C) District Collector
(D) Block Development Officer (Block Panchayat)

அம்மா பூங்கா நிறுவுவதற்கு வேலை ஒப்படைப்பு ஆணை —————— ஆல் வழங்கப்படும்.

(A) திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
(B) செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி)
(C) மாவட்ட ஆட்சித் தலைவர்
(D) வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார வளர்ச்சி)

15. How many amount is being allotted for Solar Powered Home Lighting System from Unit cost of a house constructed under Chief Minister's Solar Powered Green House Scheme?

(A) Rs. 50,000 (B) Rs. 40,000

(C) Rs. 30,000 (D) Rs. 20,000

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஒரு வீட்டில் சூரிய மின்சக்தி விளக்கு அமைப்பதற்கு எவ்வளவு தொகை வழங்கப்படும்?

(A) ரூ. 50,000 (B) ரூ. 40,000

(C) ரூ. 30,000 (D) ரூ. 20,000

16. How many percentage of houses shall be allotted to scheduled castes under Chief Minister's Solar Powered Green House Scheme?

(A) 31% (B) 30%

(C) 29% (D) 28%

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்கு எத்தனை சதவீதம் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படும்?

(A) 31% (B) 30%

(C) 29% (D) 28%

17. Which department has to identify the family having severely malnourished children to be benefited under Chief Minister's Solar Powered House Scheme?

(A) School Education

(B) Health Department

(C) Revenue Department

(D) Integrated Child Development Scheme Development

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் பயன் பெற ஊரகப் பகுதிகளில் வாழும் ஊட்டச்சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை கொண்ட குடும்பங்களை அடையாளம் காணும் துறை யாது?

(A) கல்வித் துறை

(B) சுகாதாரத் துறை

(C) வருவாய்த் துறை

(D) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத் துறை

18. Out of the total allocation for a Amma Gym ———— will be utilized for the procurement of GYM equipments.

(A) Rs. 4,31,000 (B) Rs. 4,21,000

(C) Rs. 4,11,000 (D) Rs. 4,01,000

அம்மா உடற்பயிற்சிக் கூடத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில் ———— உடற்பயிற்சிக் கூட உபகரணங்கள் வாங்க பயன்படுத்தப்படுகிறது.

(A) ரூ. 4,31,000 (B) ரூ. 4,21,000

(C) ரூ. 4,11,000 (D) ரூ. 4,01,000

19. The execution of the Chief Minister's Solar Powered Green House Scheme shall be entrusted to the

(A) Block Development Officer (Block Panchayat)

(B) Block Development Officer (Village Panchayat)

(C) Assistant Engineer/Junior Engineer (Rural Development)

(D) Assistant Director (Panchayats)

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்ட செயலாக்கம் ———— அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(A) வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)

(B) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)

(C) உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் (ஊரக வளர்ச்சி)

(D) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)

20. Under Chief Minister's Solar Powered Green House Scheme the LED based Solar Powered (SPV) home lighting systems shall have a warranty of ———— after installation and commissioning of the system.

(A) 9 Years (B) 7 Years

(C) 5 Years (D) 3 Years

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகளில் பொருத்தப்படும் ஒளி உமிழும் இருமுனைய (LED) விளக்கு மற்றும் அமைப்புகள் நிறுவப்பட்டு மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பின் குறைந்தபட்சம் ———— ஆண்டுகள் உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்.

(A) 9 வருடங்கள் (B) 7 வருடங்கள்

(C) 5 வருடங்கள் (D) 3 வருடங்கள்

21. How much fund is earmarked for documentation and other Information, Education and communication activities out of the funds allocated for CMSPGH Scheme?

(A) 1% (B) 3%

(C) 4% (D) 5%

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தில் மொத்த ஒதுக்கீட்டில் எத்தனை விழுக்காடு ஆவணப்படுத்துதல் மற்றும் செய்தி, கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது?

(A) 1% (B) 3%

(C) 4% (D) 5%

22. Chief Minister's Solar Powered Green House Scheme was launched during the year

(A) 2014-15 (B) 2013-14

(C) 2012-13 (D) 2011-12

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டமானது ———— ஆண்டில் துவக்கப்பட்டது.

(A) 2014-15 (B) 2013-14

(C) 2012-13 (D) 2011-12

23. Under MGNREGS what is the time limit for issuing Job cards (JC) if the application is made correct?

(A) Within fifteen days
(B) Within a week
(C) Within a year
(D) Within a month

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட விண்ணப்பத்தினை சரிபார்த்த பின் எத்தனை நாட்களுக்குள் வேலை அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும்?

(A) பதினைந்து நாட்களுக்குள்
(B) ஒரு வாரத்திற்குள்
(C) ஒரு வருடத்திற்குள்
(D) ஒரு மாதத்திற்குள்

24. Under Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme (MGNREGS), which one of the following work can be taken up for agriculture development activities?

(A) Farm Ponds
(B) Sandal wood Plantation
(C) Preservation of Wild Life
(D) State Fodder Development Scheme

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், விவசாய மேம்பாட்டு நடவடிக்கைகளில், கீழ்காணும் பணிகளில் எந்தப் பணியினை எடுத்துக் கொள்ளலாம்?

(A) பண்ணை குட்டை
(B) சந்தன மரங்கள் வளர்க்கும் திட்டம்
(C) வன விலங்குகள் பாதுகாப்புத் திட்டம்
(D) தமிழ்நாடு கால்நடைத் தீவன அபிவிருத்தி திட்டம்

25. Under Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme (MGNREGS) the wage for unskilled is ———————— borne by Government of India.

(A) 50%
(B) 70%
(C) 80%
(D) 75%

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் திறன்சாரா, உடல் உழைப்பு தொழிலாளர்களுக்கான ஊதியச் செலவு ———————— மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

(A) 50%
(B) 70%
(C) 80%
(D) 75%

26. Under Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme (MGNREGS) in terms of earthwork the differentlyabled are able to make about ———————— out turn only.

(A) 70%
(B) 80%
(C) 50%
(D) 40%

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மண் வேலை பணிகளில் மாற்று திறனாளிகள் ———————— வேலை செய்தால் போதுமானதாகும்.

(A) 70%
(B) 80%
(C) 50%
(D) 40%

27. Under MGNREGS ———— toll free help line is arranged for grievance redressal in every districts.

(A) 1299 (B) 1800

(C) 1100 (D) 1200

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஏற்படும் குறைகளை களைய ———— கட்டணமில்லா இலவச தொலைபேசி சேவை மாவட்டந்தோறும் நிறுவப்பட்டுள்ளது.

(A) 1299 (B) 1800

(C) 1100 (D) 1200

28. Under MGNREGS for how many years is the registration for job card is valid?

(A) 5 Years (B) 4 Years

(C) 6 Years (D) 3 Years

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், வேலை அடையாள அட்டை பதிவு செய்த பிறகு எத்தனை வருடங்களுக்கு செல்லுபடியாகும்?

(A) 5 வருடங்கள் (B) 4 வருடங்கள்

(C) 6 வருடங்கள் (D) 3 வருடங்கள்

29. Which of the following work is eligible under Member of Legislative Assembly Constituency Development Scheme (MLACDS)?

(A) Water Supply works

(B) All Revenue and recurring expenditure

(C) Desilting of ponds

(D) Installation of High mast lights

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (MLACDS) கீழ்க்கண்ட எப்பணியினை எடுத்துச் செய்யலாம்?

(A) குடிநீர் விநியோகப் பணிகள்

(B) அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்

(C) குட்டைகள் தூர்வாருதல்

(D) உயர் கோபுர மின்விளக்கு பொருத்துதல்

30. How much fund is allotted for construction and modernization of Anganwadi centres, Noon meal centres by each MLA, under Member of Legislative Assembly Constituency Development Scheme (MLACDS) during the year 2016-17?

(A) Rs. 15 lakhs (B) Rs. 20 lakhs

(C) Rs. 25 lakhs (D) Rs. 10 lakhs

2016-17ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினராலும், அங்கன்வாடி கட்டிடங்கள், சத்துணவு மையங்கள், சத்துணவு சமையல் கூடங்கள் கட்டுதல் மற்றும் நவீனப்படுத்துதல் பணிக்கு குறைந்தபட்ச எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்?

(A) ரூ. 15 இலட்சம் (B) ரூ. 20 இலட்சம்

(C) ரூ. 25 இலட்சம் (D) ரூ. 10 இலட்சம்

31. During the year 2017-18 Under MLACDS how much fund is allotted by each MLA for water supply works under tied component?

(A) Rs. 100 Lakhs (B) Rs.130 Lakhs

(C) Rs. 120 Lakhs (D) Rs. 110 Lakhs

2017-18ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் வரையறுக்கப்பட்ட கூறு நிதியிலிருந்து குடிநீர் திட்டப்பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யும் தொகை எவ்வளவு?

(A) ரூ. 100 இலட்சம் (B) ரூ. 130 இலட்சம்

(C) ரூ. 120 இலட்சம் (D) ரூ. 110 இலட்சம்

32. Which one of the following officer is not a member in the Block Level Committee finalize the works to be taken in the village panthayat under THAI II Scheme?

(A) Block Development Officer (Block Panchayat)

(B) Assistant Engineer/Block Engineer

(C) Assistant Executive Engineer (RD)

(D) Block Development Officer (Village Panchayat)

தாய் II திட்டத்தின் கீழ் கிராம ஊராட்சி அளவில் பணிகளை இறுதி செய்யும் வட்டார அளவிலான குழுவில், கீழ்க்கண்ட அலுவலர்களில் இடம்பெறாத அலுவலர் யார்?

(A) வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)

(B) உதவிப் பொறியாளர் / வட்டார பொறியாளர்

(C) உதவி செயற் பொறியாளர் (ஊரக வளர்ச்சி)

(D) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)

33. —————— shall super check the works taken under THAI II Scheme.

(A) Assistant Engineer (B) Union Overseer

(C) Road Inspector (D) Executive Engineer (RD)

தாய் II திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளை —————— மேலாய்வு செய்ய வேண்டும்.

(A) உதவிப் பொறியாளர் (B) ஒன்றிய பணி மேற்பார்வையாளர்

(C) சாலை ஆய்வாளர் (D) செயற் பொறியாளர் (ஊரக வளர்ச்சி)

34. Under Comprehensive School Infrastructure Development Scheme (CSIDS) the requirement status of each school shall be obtained from

(A) Baseline Survey 2013

(B) Socio Economic Caste census 2011

(C) Population Census 2011

(D) THAI Survey Format 6(b)

ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பள்ளிகளுக்கான புதிய பணிகளை தேர்வு செய்ய —————— உள்ள விவரங்கள் எடுத்துக் கொள்ளப்படும்.

(A) அடிப்படை கணக்கெடுப்பு புள்ளி விவரம் 2013

(B) சமூக பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு 2011

(C) மக்கள்தொகை கணக்கெடுப்பு 2011

(D) தாய் (THAI) கணக்கெடுப்பு படிவம் 6(b)

35. The District Collector has to test verify ―――――――― of the Schools selected Under Comprehensive School Infrastructure Development Scheme (CSIDS)?

(A) 40% (B) 30%

(C) 20% (D) 10%

ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிகள் தேர்வு செய்யப்பட்ட ―――――――― பள்ளிகளில் மாவட்ட ஆட்சியர் சோதனை சரிபார்பை மேற்கொள்ள வேண்டும்.

(A) 40% (B) 30%

(C) 20% (D) 10%

36. Under Comprehensive School Infrastructure Development Scheme (CSIDS) ―――――――― of the total allocation shall be earmarked for Information Education and Community Activities.

(A) 4% (B) 1%

(C) 2% (D) 3%

ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ―――――――― செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

(A) 4% (B) 1%

(C) 2% (D) 3%

37. Which of the following work can be taken Under Comprehensive School Infrastructure Development Scheme (CSIDS)?

(A) Construction of new building for the school

(B) Purchase of books for libraries

(C) Purchase of equipments for lab

(D) Purchase of Sports equipments

ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (CSIDS) கீழ்க்கண்ட பணிகளில் எப்பணியினை மேற்கொள்ளலாம்?

(A) பள்ளிகளில் புதிய வகுப்பறை கட்டடம் கட்டுதல்

(B) நூலகத்திற்கு புத்தகங்கள் கொள்முதல் செய்தல்

(C) ஆய்வுக் கூடங்களுக்கு உபகரணங்கள் கொள்முதல் செய்தல்

(D) விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்தல்

38. Who shall take action for demolition of the school building if the Block Level Committee recommend for demolition Under Comprehensive School Infrastructure Development Scheme (CSIDS)?

(A) Assistant Engineer (RD) (B) Union Overseer

(C) Assistant Executive Engineer (RD) (D) Executive Engineer (RD)

ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வட்டார அளவிலான குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட பள்ளி கட்டடத்தை இடிக்க யாரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்?

(A) உதவிப் பொறியாளர் (ஊரக வளர்ச்சி) (B) ஒன்றிய பணி மேற்பார்வையாளர்

(C) உதவி செயற் பொறியாளர் (ஊரக வளர்ச்சி) (D) செயற் பொறியாளர் (ஊரக வளர்ச்சி)

39. Which of the following work is mentioned as additional requirements under Tamil Nadu Village Habitation Improvement Scheme (THAI) ?

(A) Water supply (B) Street lights

(C) Roads (D) Self Help Group Building

தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பின்வருவனவற்றுள் எப்பணியானது கூடுதல் தேவை என குறிப்பிடப்படுகிறது?

(A) குடிநீர் விநியோகம் (B) தெரு விளக்குகள்

(C) சாலைகள் (D) சுய உதவிக் குழு கட்டடம்

40. Tamil Nadu Corporation for Development of women was established in the year

(A) 1983 (B) 1985

(C) 1987 (D) 1989

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் ——————ம் ஆண்டில் நிறுவப்பட்டது.

(A) 1983 (B) 1985

(C) 1987 (D) 1989

41. In Tamil Nadu —————— scheme is implemented for poverty reduction and livelihood promotion in rural areas.

(A) Indira Awaas Yojana

(B) Tamil Nadu State Rural Livelihood Mission

(C) Self Sufficiency Scheme

(D) Clean Village Campaign

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்காக —————— திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(A) இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம்

(B) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

(C) தன்னிறைவுத் திட்டம்

(D) தூய்மையான கிராம இயக்கம்

42. Tamilnadu State Rural Livelihood Mission was implemented from the year

(A) 2012-13 (B) 2013-14

(C) 2014-15 (D) 2015-16

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் —————— ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(A) 2012-13 (B) 2013-14

(C) 2014-15 (D) 2015-16

43. How much fund is allotted for each VPRC/PLF for promoting sanitation through Inter-Personal Communication during the year 2016-17?

(A) Rs. 6,000 (B) Rs. 7,000

(C) Rs. 8,000 (D) Rs. 9,000

2016-17ம் ஆண்டில் நேர்முக தகவல் பரிமாற்றம் மூலம் சுகாதாரம் தொடர்பான செயல்பாடுகளை மேற்கொள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு விடுவிக்கப்படும் தொகை

(A) ரூ. 6,000 (B) ரூ. 7,000

(C) ரூ. 8,000 (D) ரூ. 9,000

44. Indira Awaas Yojana has been revamped and renamed as ———————— from 2016-17.

(A) Pradhan Mantri Grama Sadak Yojana

(B) Pradhan Mantri Awaas Yojana (Gramin)

(C) Clean Village Campaign

(D) Self Sufficiency Scheme

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் 2016-17ம் ஆண்டு முதல் சீரமைக்கப்பட்டு ———————— என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(A) பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்

(B) பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)

(C) தூய்மையான கிராம இயக்கம்

(D) தன்னிறைவுத் திட்டம்

45. Out of the total allotment, how many percentage of houses shall be allotted to other categories under Pradhan Mantri Awaas Yojana (Gramin)?

(A) 70% (B) 60%

(C) 40% (D) 50%

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் மொத்த விழுக்காட்டில் இதர வகுப்பினர்களுக்கு எத்தனை விழுக்காடு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படும்?

(A) 70% (B) 60%

(C) 40% (D) 50%

46. Under Pradhan Mantri Awaas Yojana (Gramin), ———————— cannot be in the preference list for the selection of beneficiaries from others category.

(A) Household with widows

(B) Household with single girl child

(C) Transgender persons

(D) Members in above poverty line list

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் இதர வகுப்பு பயனாளிகளை தேர்வு செய்வதற்கான முன்னுரிமைப் பட்டியலில் ———————— இடம் பெறவில்லை.

(A) விதவைகளை தலைவராக கொண்ட குடும்பங்கள்

(B) ஒரு பெண் குழந்தை கொண்ட குடும்பங்கள்

(C) திருநங்கைகள்

(D) வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளோர்

47. Who is the measurement authority for the bills of value more than Rs. 1 Lakh under MGNREGS?

(A) Road Inspector

(B) Union Overseer

(C) Assistant Engineer / Block Engineer (Rural Development)

(D) Worksite Facilitator

மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணியின் மதிப்பீடு ரூ. 1 லட்சத்திற்கு மேற்பட்ட பணிகளுக்கு அளவு பதிவு செய்யும் அலுவலர் யார்?

(A) சாலை ஆய்வாளர்

(B) ஒன்றியபணி மேற்பார்வையாளர்

(C) உதவிப் பொறியாளர் / வட்டார பொறியாளர் (ஊரக வளர்ச்சி)

(D) பணித்தள பொறுப்பாளர்

48. Who is the authority for implementation of Amma park scheme at district level?

(A) District Collector

(B) Project Director, (DRDA)

(C) Block Development Officer (Village Panchayat)

(D) Block Development Officer (Block Panchayat)

மாவட்ட அளவில் அம்மா பூங்கா திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்புடையவர் யார்?

(A) மாவட்ட ஆட்சித் தலைவர்

(B) திட்ட இயக்குநர், (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை)

(C) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)

(D) வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)

49. The village panchayat having annual income ———————— shall take into consideration for the establishment of Amma park.

(A) more than Rs. 20 lakhs

(B) more than Rs. 10 lakhs

(C) more than Rs. 5 lakhs

(D) more than Rs. 7 lakhs

அம்மா பூங்கா நிறுவப்படவுள்ள ஊராட்சியின் ஆண்டு வருமானம் ———————— இருத்தல் வேண்டும்.

(A) ரூ. 20 இலட்சத்திற்கும் அதிகமானதாக

(B) ரூ. 10 இலட்சத்திற்கும் அதிகமானதாக

(C) ரூ. 5 இலட்சத்திற்கும் அதிகமானதாக

(D) ரூ. 7 இலட்சத்திற்கும் அதிகமானதாக

50. Which one of the following officer is not a member in the Tender finalization committee for the procurement of LED based SPV Home lighting system, under Chief Minister's Solar Powered Green House Scheme?

(A) District Collector

(B) Executive Engineer (Rural Development)

(C) Project Director (DRDA)

(D) Assistant Director (Panchayats)

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், வீடுகளில் பொருத்தப்படும் ஒளி உமிழும் இருமுனைய (LED) விளக்குகளை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளியினை இறுதி செய்யும் குழுவில் இடம் பெறாதவர் யார்?

(A) மாவட்ட ஆட்சித் தலைவர்

(B) செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி)

(C) திட்ட இயக்குநர், (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை)

(D) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)

51. The area of an weaving cum living hall constructed under Chief Minister's Solar Powered Green House Scheme for Weavers is

(A) 213 sq.ft (B) 260 sq.ft

(C) 270 sq.ft (D) 290 sq.ft

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கு கட்டப்படும் ஒவ்வொரு வீட்டிலும் ———————— பரப்பளவில் தறியுடன் கூடிய வாழும் அறை அமைக்கப்படும்.

(A) 213 ச.அடி (B) 260 ச.அடி

(C) 270 ச.அடி (D) 290 ச.அடி

52. Chief Ministers Solar Powered Green House Scheme for weavers was launched during the year

(A) 2013-14 (B) 2011-12

(C) 2014-15 (D) 2016-17

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கான வீடுகள் திட்டமானது துவக்கப்பட்ட ஆண்டு

(A) 2013-14 (B) 2011-12

(C) 2014-15 (D) 2016-17

53. Which of the following work is prohibited under Tamil Nadu Village Habitation Improvement Scheme (THAI)?

(A) Water supply works

(B) New streetlights

(C) Pathway to burial ground

(D) All works including commercial establishments /units

தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (THAI) பின்வருவனவற்றுள் தடை செய்யப்பட்ட பணி எது?

(A) குடிநீர் விநியோகப் பணிகள்

(B) புதிய தெருவிளக்குகள் அமைத்தல்

(C) இடுகாட்டிற்கான பாதை அமைத்தல்

(D) அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் குறித்த பணிகள்

54. Under Chief Minister's Solar Powered Green House Scheme any eligible poor person whose name does not figure in the below poverty line can verified by whom?

(A) District Collector

(B) Project Director (DRDA)

(C) Block Development Officer (Village Panchayat)

(D) Assistant Director level officer

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் ஏழை ஒருவரின் பெயர் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் விடுபட்டிருப்பின் அதன் உண்மைத் தன்மை யாரால் சரிபார்க்கப்பட வேண்டும்?

(A) மாவட்ட ஆட்சித் தலைவர்

(B) திட்ட இயக்குநர், (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை)

(C) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம வளர்ச்சி)

(D) உதவி இயக்குநர் நிலையிலான அலுவலர்

55. Government of India introduced Pradhan Mantri Gram Sadak Yojana II during the year

(A) 2013

(B) 2016

(C) 2017

(D) 2018

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் II மத்திய அரசால் —————— ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

(A) 2013

(B) 2016

(C) 2017

(D) 2018

56. Who has to maintain a separate account for Comprehensive School Infrastructure Development Scheme (CSIDS) at block level?
(A) Block Development Officer (Block Panchayat)
(B) Project Director (DRDA)
(C) Block Development Officer (Village Panchayat)
(D) Assistant Director Level Officer

ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு வட்டார அளவில் தனி கணக்கு பராமரிக்க வேண்டிய அலுவலர் யார்?
(A) வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)
(B) திட்ட இயக்குநர், (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை)
(C) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)
(D) உதவி இயக்குநர் நிலையிலான அலுவலர்

57. The Incentive amount of ———————— per motivator shall given once for the Open Defecation Free (ODF) village panchayat under Swachh Bharat Mission (Gramin).
(A) Rs. 5,000 (B) Rs. 7,000
(C) Rs. 8,000 (D) Rs. 9,000

தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் (ஊரகம்) திறந்தவெளி மலம் கழித்தலற்ற ஊராட்சிக்கு ஊக்குநருக்கு ———————— ஊக்க நிதியாக ஒரு முறை வழங்கப்படும்.
(A) ரூ. 5,000 (B) ரூ. 7,000
(C) ரூ. 8,000 (D) ரூ. 9,000

58. Who accord Administrative sanction under Comprehensive School Infrastructure Development Scheme (CSIDS)?
(A) District Collector
(B) Project Director (DRDA)
(C) Block Development Officer (Village Panchayat)
(D) Assistant Director Level Officer

ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கும் அலுலவர் யார்?
(A) மாவட்ட ஆட்சித் தலைவர்
(B) திட்ட இயக்குநர், (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை)
(C) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)
(D) உதவி இயக்குநர் நிலையிலான அலுவலர்

59. What is the share of central and State Government in National Rurban Mission?
(A) 60 : 40 (B) 50 : 50
(C) 70 : 30 (D) 40 : 60

தேசிய ரூர்பன் இயக்கத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி பங்கீடு விகிதாச்சாரம் எவ்வளவு?
(A) 60 : 40 (B) 50 : 50
(C) 70 : 30 (D) 40 : 60

60. What is the unit cost of a Primary Milk Producers Cooperative Society building under Mahatma Gandhi National Rural Employment Guarantee scheme?

(A) Rs. 10 lakh (B) Rs. 4 lakh

(C) Rs. 5 lakh (D) Rs. 7 lakh

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் கட்டப்படும் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க கட்டடத்திற்கான அலகுத் தொகை எவ்வளவு?

(A) ரூ. 10 இலட்சம் (B) ரூ. 4 இலட்சம்

(C) ரூ. 5 இலட்சம் (D) ரூ. 7 இலட்சம்

61. Women Self Help Group approach was initially started in ———————— district during the year 1989.

(A) Dharmapuri (B) Madurai

(C) Trichy (D) Coimbatore

1989ம் ஆண்டில் ———————— மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் முதலில் செயல்படுத்தப்பட்டது.

(A) தருமபுரி (B) மதுரை

(C) திருச்சி (D) கோயமுத்தூர்

62. How much minimum share to be contributed by public under Self Sufficiency Scheme?

(A) 1/4 (B) 1/3

(C) 1/2 (D) 3/4

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பொது மக்களால் குறைந்தபட்சம் எவ்வளவு பங்குத் தொகை வழங்கப்பட வேண்டும்?

(A) 1/4 (B) 1/3

(C) 1/2 (D) 3/4

63. Tamil Nadu Rural Roads Improvement Scheme (TNRRIS) was introduced during the year

(A) 2015-16 (B) 2012-13

(C) 2011-12 (D) 2010-11

தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் ———————— ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

(A) 2015-16 (B) 2012-13

(C) 2011-12 (D) 2010-11

64. Which one of the following person is not a committee member for the selection and finalization of works under Rural Buildings Maintenance and Renovation Scheme (RBMRS) (2013-14)?

(A) District Panchayat Secretary

(B) Village Panchayat President

(C) Block Development Officer (Village Panchayat)

(D) Assistant Engineer / Block Engineer (RD)

2013-14-ஆம் ஆண்டு ஊரக கட்டிடங்கள் பழுது மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் (RBMRS) பணிகளை தேர்வு மற்றும் இறுதி செய்வதற்கான குழுவில் இடம்பெறாதவர் யார்?

(A) மாவட்ட ஊராட்சி செயலர்

(B) கிராம ஊராட்சித் தலைவர்

(C) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)

(D) உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் (ஊரக வளர்ச்சி)

65. National Rurban Mission was launched by Government of India on

(A) 16.9.2015 (B) 2.10.2015

(C) 2.10.2016 (D) 2.10.2017

தேசிய ரூர்பன் இயக்கம் மத்திய அரசால் ———————— அன்று நிறுவப்பட்டது.

(A) 16.9.2015 (B) 2.10.2015

(C) 2.10.2016 (D) 2.10.2017

66. For solid waste management activities, one tricycle can be purchased for every ———————— households.

(A) 150 (B) 200

(C) 300 (D) 250

திடக் கழிவு மேலாண்மை பணிகளுக்கென ஒவ்வொரு ———————— வீடுகளுக்கும் ஒரு மூன்று சக்கர வண்டி (Tricycle) வீதம் வாங்கப்படும்.

(A) 150 (B) 200

(C) 300 (D) 250

67. The unit for implementation of Solid Waste Management activities shall be called as

(A) Clusters (B) Block

(C) District (D) State

திடக் கழிவு மேலாண்மை பணியினை செயல்படுத்துவதற்கான அலகு ———————— என்று அழைக்கப்படும்

(A) தொகுப்பு (B) வட்டாரம்

(C) மாவட்டம் (D) மாநிலம்

68. The National Rural Livelihoods Mission (Aajeevika) was launched on

(A) 3rd June 2011
(B) 1st May 2010
(C) 2nd October 2015
(D) 15th August 2009

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் (ஆஜீவிகா) ———————— அன்று துவக்கப்பட்டது.

(A) 3 ஜூன் 2011
(B) 1 மே 2010
(C) 2 அக்டோபர் 2015
(D) 15 ஆகஸ்ட் 2009

69. Saansad Adarsh Gram Yojana (SAGY) has been launched by Government of India on

(A) 02.10.2015
(B) 15.08.2012
(C) 11.10.2014
(D) 01.05.2010

நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராம திட்டம் (SAGY) ———————— அன்று மத்திய அரசால் தொடங்கப்பட்டது.

(A) 02.10.2015
(B) 15.08.2012
(C) 11.10.2014
(D) 01.05.2010

70. Under Saansad Adarsh Gram Yojana (SAGY) each member of parliament should identify one village panchayat with a population of __________________ in plain areas.

(A) 3000 - 5000
(B) 1000 - 5000
(C) 2000 - 4000
(D) 2500 - 5000

நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராம திட்டத்தின் கீழ் (SAGY) ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் சமவெளி பகுதிகளில் ———————— மக்கள் தொகை கொண்ட கிராம ஊராட்சியை தேர்ந்தெடுக்க வேண்டும்.

(A) 3000 - 5000
(B) 1000 - 5000
(C) 2000 - 4000
(D) 2500 - 5000

71. Which of the following is a major work under Rural Buildings Maintenance and Renovation Scheme?

(A) Colour washing of the buildings
(B) Repair of doors and windows
(C) Repairs of cracks in building walls
(D) Complete replacement of damaged roof

ஊரக கட்டிடங்கள் பழுது மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் (RBMRS) பின்வருவனவற்றுள் பெரும் பணி (Major work) எது?

(A) கட்டிடங்களுக்கு வர்ணம் தீட்டுதல்
(B) கதவு மற்றும் ஜன்னல்கள் பழுது பார்த்தல்
(C) சுவரிலுள்ள விரிசல்களை பழுது பார்த்தல்
(D) பழுதடைந்த கூரையினை முழுவதுமாக மாற்றியமைத்தல்

72. Member of Parliament Local Area Development Scheme (MPLADS) was launched on

(A) 1990 (B) 1993

(C) 1995 (D) 2000

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் —————— ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

(A) 1990 (B) 1993

(C) 1995 (D) 2000

73. Under Chief Minister's Solar Powered Green House Scheme —————— Watt Light Emitting Diode (LED) shall be installed in toilet.

(A) 5 Watt (B) 7 Watt

(C) 3 Watt (D) 4 Watt

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ் —————— திறன் கொண்ட ஒளி உமிழும் இரு முனைய விளக்கு (LED) கழிவறையில் அமைக்கப்படும்.

(A) 5 வாட் (B) 7 வாட்

(C) 3 வாட் (D) 4 வாட்

74. As per National Rurban Mission Guidelines, a "Rurban Cluster" would be a cluster of geographically contiguous villages within a population of about

(A) 25,000 to 50,000 (B) 10,000 to 50,000

(C) 20,000 to 40,000 (D) 15,000 to 20,000

தேசிய ரூர்பன் இயக்க வழிகாட்டுதலின்படி பூலோக அடிப்படையில் தொடர்ச்சியான நிலப்பரப்பில் உள்ள ஊராட்சிகளில் "ரூர்பன் தொகுப்பு" என்பது —————— மக்கள் தொகை கொண்ட ஊராட்சிகளின் தொகுப்பு ஆகும்.

(A) 25,000 முதல் 50,000 வரை (B) 10,000 முதல் 50,000 வரை

(C) 20,000 முதல் 40,000 வரை (D) 15,000 முதல் 20,000 வரை

75. In Tamilnadu Solid Waste Management scheme was implemented initially in —————— village panchayats during 2015-16.

(A) 1000 (B) 2000

(C) 750 (D) 1500

தமிழ்நாட்டில் 2015-16ம் ஆண்டில் முதற்கட்டமாக —————— ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிள் மேற்கொள்ளப்பட்டது.

(A) 1000 (B) 2000

(C) 750 (D) 1500

76. In sparsely populated plain areas each Thooimai Kaavalar covers 50 household and collects —————— waste under Solid Waste Management activities.

(A) 50 kg (B) 60 kg

(C) 30 kg (D) 100 kg

திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பரவலான மக்கள் தொகை கொண்ட சமவெளிப் பகுதிகளில், ஒவ்வொரு தூய்மை காவலரும் 50 குடியிருப்புகளுக்குச் சென்று —————— எடையுள்ள குப்பையினை சேகரிக்க வேண்டும்.

(A) 50 கிலோ கிராம் (B) 60 கிலோ கிராம்

(C) 30 கிலோ கிராம் (D) 100 கிலோ கிராம்

77. Who accord administrative sanction to the works recommended by Member of Legislative Assembly (MLA) under Member of Legislative Assembly Constituency Development Scheme (MLACDS)?

(A) District Collector

(B) Executive Engineer (Rural Development)

(C) Project Director, (DRDA)

(D) Assistant Director (Panchayat)

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (MLACDS) சட்டமன்ற உறுப்பினரால் பரிந்துரை செய்யப்படும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கும் அலுவலர் யார்?

(A) மாவட்ட ஆட்சித் தலைவர்

(B) செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி)

(C) திட்ட இயக்குநர், (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை)

(D) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)

78. The National Rural Employment Guarantee Act was Renamed as Mahatma Gandhi National Rural Employment Guarantee Act on

(A) May 1-2010 (B) August 15-2010

(C) Dec 1-2009 (D) October 2-2009

தேசிய ஊரக வேலை உறுதி சட்டம் ———————— முதல் "மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

(A) மே 1-2010 (B) ஆகஸ்ட் 15-2010

(C) டிசம்பர் 1-2009 (D) அக்டோபர் 2-2009

79. Under Member of Parliament Local Area Develpoment Scheme (MPLADS) Member of Parliaments are to recommend every year works consisting at least ———————— of the MPLADS entitlement for the year for areas inhabited by Scheduled Caste population.

(A) 15% (B) 5%

(C) 10% (D) 12.5%

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (MPLADS) கீழ் வருடந்தோறும் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் ———————— சதவீதம் அட்டவணை வகுப்பினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதிக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

(A) 15% (B) 5%

(C) 10% (D) 12.5%

80. Socio Economic Development Scheme is implemented in Dharmapuri and ———————— districts to address the naxalite problems.

(A) Krishnagiri (B) Kanniakumari

(C) Ariyalur (D) Villupuram

சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டமானது தருமபுரி மற்றும் ———————— மாவட்டங்களில் நக்சலைட்டுகளின் பிரச்சனைகளை தடுத்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(A) கிருஷ்ணகிரி (B) கன்னியாகுமரி

(C) அரியலூர் (D) விழுப்புரம்

ROUGH WORK

**ROUGH WORK**